26.02.2026

O.S.No. 103/2020

PW1- லெட்சுமி – க/பெ. மாடசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் கடையநல்லூர் நகரத்தில் நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தவை என்றால் சரிதான்.

2. தற்போது கடையநல்லூர் நகரத்தில் முழுமையாக அளவீடு செய்து நகர அளவையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. நகர அளவைப்படி அனைத்து சொத்துக்களுக்கும் புதிய சர்வே எண் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. என் வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் அடுத்த வடபக்கம் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான்.

5. தற்போது அந்த கிழமேல் தெருவானது கடையநல்லூர் நகராட்சியால் நகர அளவை செய்யப்பட்டு தெரு என வகைப்பாடு செய்து அங்கு சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.3 ஆவணத்தில் தெருவானது சர்வே எண்.67 என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. தெரு கடையநல்லூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில் நான் கடையநல்லூர் நகராட்சியை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்காததால் என் வழக்கு அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. வழக்கு சொத்துக்கள் ஆதியில் கிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டு மேற்படி கிருஷ்ணனுக்கு மாடன் மற்றும் கிருஷ்ணன் என்ற இரு வாரிசுகள் இருந்தனர் என்றால் சரிதான்.

9. மேற்படி மாடனுக்கு என் கணவர் வேலு, கிருஷ்ணராஜ் மற்றும் கடற்கரை ஆகிய 3 பேர் வாரிசுகள் என்றால் சரிதான்.

10. மேற்படி கிருஷ்ணராஜ் வழக்கு தாக்கல் செய்த பின்னர் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

11. மேற்படி கிருஷ்ணராஜ் மற்றும் அவரின் வாரிசுகளை இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

12. தபசில் சொத்துக்கள் ஸ்தலத்தில் கிருஷ்ணன் உயிருடன் இருந்த போது எவ்வாறு இருந்ததோ அவ்வாறே தான் நாளது வரை இருந்து வருகிறது என்றால் சரிதான்.

13. எனது கணவர் மற்றும் அவரது சகோதரர்களுக்கிடையே பாகம் ஏற்பட்டது என்பதை நிரூபிப்பதற்காகத் தான் வா.சா.ஆ.4–ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.4 பாக பத்திரத்தில் 1,2 பிரதிவாதிகளோ அவர்களது தகப்பனாரோ தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

15. கிழமேல் தெரு முழுவதும் கடையநல்லூர் நகராட்சியால் முழு விஸ்தீரணத்திற்கும் சிமெண்ட் ரோடு போடப்பட்டது என்றால் சரிதான்.

16. 1ம் தபசில், 2ம் தபசில் என பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

17. நான் பிராதுடன் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யாததால் என்னால் வழக்கு சொத்தின் அமைப்பை நீதிமன்றத்திற்கு எடுத்துக்கூறாத காரணத்தினால் என்னுடைய வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

18. எனக்கும் கடற்கரை மற்றும் கிருஷ்ணராஜ்க்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான்.

19. கடந்த 31.10.2010ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பாக விடுதலை ஆவணம் வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

20. கடந்த 03.01.2011ல் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பாக விடுதலை ஆவணம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான்.

21. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2ல் உள்ள விவரங்கள் சரியானவை என்றால் சரிதான்.

22. வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் என் கணவரின் சகோதரர் கிருஷ்ணன் என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

23. கிருஷ்ணன் வீட்டிற்கும் 1ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே பொது முடுக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த பொது முடுக்கானது எனக்கு திருமணமான காலத்திலிருந்து இருந்து வருகிறது என்றால் சரிதான்.

24. பொதுமுடுக்கானது இரு வீட்டின் உரிமையாளருக்கும் தான் பாத்தியம் என்றால் சரியல்ல மேற்கு பக்கம் உள்ள வீட்டின் உரிமையாளருக்கு மட்டுமே பாத்தியம். மேற்கு பக்கம் உள்ள வீட்டின் உரிமையாளர் என் கணவரின் உடன் பி றந்த சகோதரர் கிருஷ்ணன் என்ற கிருஷ்ணராஜ் என்றால் சரிதான்.

25. பொது முடுக்கை கிருஷ்ணராஜ் மற்றும் 1,2 பிரதிவாதிகளும் பொதுவாக அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல.

26. 1ம் பிரதிவாதி மீது உள்ள விரோதம் காரணமாக பொது முடுக்கில் 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

27. என் கணவர் குடும்பத்தில் ஏற்பட்ட பாக பத்திரம் வா.சா.ஆ.4ன் படி 1ம் தபசில் சொத்து என் கணவருக்கும், 2ம் தபசில் சொத்து கிருஷ்ணராஜ்க்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

28. நான் வழக்கில் கூறுவது போல் பிரதிவாதிகள் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல.

29. பிரதிவாதிகள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக நான் தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

30. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பு செய்யாததாலும் நான் கோரும் பரிகாரம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் என் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி